DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.159/20

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name தனசேகரன் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தேனி பிசிபட்டியில் குடியிருக்கிறேன். இராணுவத்தில் பணியாற்றி ஒய்வு பெற்று சொந்த தொழில் செய்துவருகிறேன். ராஜசேனாதிபதி அவர் என் உடன்பிறந்த சகோதரர். அவர் அன்னலட்சுமி உணவகத்தில் மேலாளராக பணிபுரிந்து வந்தார். அவர் கடந்த 2.2.20ம் தேதி காலை சுமார் 9மணிக்கு வேலைக்கு செல்வதற்காக அவருடைய TVS ஸ்கூட்டி பெப் என்ற இருசக்கரவாகனத்தில் கேகேஆர் நகரிலிருந்து புறப்பட்டு தேனியிலிருந்து பெரியகுளம் செல்லும் மெயின் ரோட்டில் ரோட்டை கடப்பதற்காக சாலையின் நடுவில் கட்டப்பட்டுள்ள தடுப்பு சுவரை கடந்து செல்வதற்காக நின்றுக்கொண்டிருந்த போது வடக்கலிருந்து தெற்குநோக்கி வந்த பல்சர் இருசக்கரவாகனம் அவர் மீது மோதியதில் என் அண்ணனுக்கு இரண்டு முழங்கைகள் தலை, வயிறு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது. மேற்படி இருசக்கரவாகனத்தை ஒட்டி வந்தவர் தேனி அல்லிநகரத்தை சேர்ந்த விக்னேஷ் என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேன். இதுசம்மந்தமாக அன்னலட்சும் உணவகத்தில் வேலை பார்த்தவர் எனக்கு தொலைபேசியில் தகவல் சொன்னார். அப்போது நான் தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் கடைக்கு சென்றுக்கொண்டிருந்தேன். தகவல் கிடைத்தவுடன் சம்பவ இடம் சென்று பார்த்த போது என் அண்ணன் மயக்கநிலையில் இருந்தார். தனியார் அவசர ஊர்தியில் அவரை ஏற்றி க.விலக்கு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தேன். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பின்பு நான் தேனி காவல்நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ1. போலிசார் என்னை விசாரித்தார்கள். என் அண்ணனின் இயற்பெயர் சேனாதிபதி என்பதால் நான் அந்த பெயரை புகாரில் குறிப்பிட்டிருந்தேன். அவர் பின்னிட்டு தனது பெயரை ராஜசேனாதிபதி என மாற்றியுள்ளார். அந்த விபரத்தை நான் போலிச் விசாரணையின் போது தெரிவித்தேன்.

குறுக்கு விசாரணை இல்லை